சாட்சிகளின் வாக்குமூலம்
பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 (I) உ.வி.மு.ச.
பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.

**அ.வ.எண். 203/2012**

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

**வாக்குமூலம் – பி.வா.சா.3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பழனிச்சாமி | மதம் | : | |
| த/க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுகா | : | | நாள் | : | 21.07.2026 |

1987ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2026 ஆண்டு ஜுலை 21ம் நாள் சாட்சியம்.

---

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் பிரதிவாதி தரப்பு சாட்சி ஆவேன். இவ்வழக்கின் விவரங்கள் எனக்கு தெரியும். அதனால் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். என்னுடைய சத்திய பிரமாண வாக்கு மூலத்தை முதல் விசாரணையாக தாக்கல் செய்கிறேன்.

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. பிரதிவாதிகள் எனது உறவினர்கள். 1,2 பிரதிவாதிகள் தனித் தனியாக வசித்து வந்தார்கள். 2 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் ஒரே குடும்பமாக வசித்து வந்தார்கள் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு சுமார் 5 ஏக்கர் விவசாய பூமி இருந்தது. 1ம் பிரதிவாதி என்னிடம் கொடுத்தாக சொல்லப்படும் உயிலை நான் படித்துப் பார்த்தேன்.

2ம் பிரதிவாதி மீது நம்பிக்கை இல்லாத காரணத்தினால் 3,4 பிரதிவாதிகள் பெயரில் உயில் எழுதி வைத்ததாக வாசகம் எழுதப்பட்டு இருந்தது. உயில் எழுதப்பட்டு இருந்த சொத்திற்கான புல எண் எனக்குத் தெரியாது. உயில் எழுதி 15, 20 நாட்களில் என்னிடம் கொடுத்தார். உயில் எழுதப்பட்ட தேதி எனக்கு சரியாகத் தெரியாது. 2020-ம் ஆண்டில் உயிலை எழுதினார். உயில் எழுதும் போது நான் உடன் இல்லை. உயில் எழுதிய போது யார் யார் உயில் எழுதிய இடத்தில் இருந்தார்கள் என்று எனக்கு நேரிடையாகத் தெரியாது. பழனிச்சாமிக்கு நான் நன்கு அறிமுகமானவர் என்பதால் என்னிடம் உயிலை கொடுத்தார். என்னிடம் உயிலை கொடுத்தற்கு பிறகு ஒரு வருடம் மூன்று மாதங்கள் கழித்து பழனிச்சாமி இறந்து விட்டார். பழனிச்சாமி இறந்து 15 நாட்களுக்கு பிறகு உயிலை சரவணன், கலையரசன் ஆகியோர்களிடம் நான் கொடுத்தேன்.

2. இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டு இருந்த விவரம் 2012-ம் வருடத்தில் எனக்கு தெரியும். 2 முதல் 4 பிரதிவாதிகள் பெயரில் வாதிகள் கடந்த 2003-ம் வருடமே அவர்களது பாகத்தைப் பொறுத்து வழக்கு தாக்கல் செய்து நீதிமன்றம் மூலம் கிரையப் பத்திரம் பெற்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்குத் தெரியாது. நான் உயிலை பழனிச்சாமிக்கவுண்டர் என்னிடம் கொடுத்ததாக நான் பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. 2 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் கூட்டுச் சேர்ந்து போலியாக இந்த உயிலை தயார் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் எனது

உறவினர் என்பதால் அவர்களுக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

/ஒம் /**R**.பாண்டி மகாராஜா,

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

தாராபுரம்.